பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 13 | வெள்ளிக்கிழமை | 29.12.2023 | கதிர் 413

### பொருளாதார நெருக்கடி காரணமாக

# 60 சதவீத குடும்பங்களின் மாதாந்த வருமானம் வீழ்ச்சி

### புள்ளிவிவரத் திணைக்கள கணக்கெடுப்பில் தெரிவிப்பு

**பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் குடும்பங்களின் மாத வருமானம் 60.5 வீதத்தால் குறைந்துள்ளதாக சமீபத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.**

**அதேவேளை, 91 வீதமான குடும்பங்களின் சராசரி மாதச் செலவு அதிகரித்துள்ளதாகவும் திணைக்களம் கூறுகிறது.**

**வருமானம் குறைந்துள்ள குடும்பங்களில் 73.6 சதவீதம் பேர் அதனை ஈடுசெய்வதற்கு** ☞ 2

## இது ரகசியம் அல்ல!



மனிதர்களுக்குத் துன்பம் வந்தால் கடவுளிடம் போய் முறையிடலாம். அந்தக்கடவுளுக்கே துன்பம் என்றால் எங்கு சென்று முறையிடுவது? அந்த நிலைதான் கதிர்காமத்தில் இப்போதுள்ளது. கதிர்காமம் தேவாலயத்தில் இருந்த தங்கத் தட்டு ஒன்று காணாமற்போனமை தொடர்பாக அதனது தலைமை அறங்காவலர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தச் சர்ச்சை ஏற்பட்டு நீண்ட நாள்களாகிவிட்டது. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இந்த விடயத்தை விசாரிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து தலைமறைவான அறங்காவலர் நேற்று பொலிஸாரிடம் சரணடைந்தார். அவரை நிபந்தனைகளுடன் பிணை ☞ 2

## தட்டம்மை நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

9 மாவட்டங்களில் தட்டம்மை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ளது.

தட்டம்மை நோயாளர்கள் அதிகம் பதிவாகும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, ☞ 8

## தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தை சீர்தூக்கி ஆராய்வதே தமிழருக்கு நல்லது

### சுரேஷ் க. பிரேமச்சந்திரன் அறிக்கை

ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் அவசரப்பட வேண்டாம் என்றும் தேர்தலைப் பகிஷ்கரிப்போம் என்றும் பல கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், தமிழர் தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து தேர்தலின் சாதக பாதகங்களை ஆராய்ந்து நல்ல முடிவினை எடுப்பதே தமிழ்த்தேசிய இனத்திற்கு அனுகூலமாக அமையும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ்க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:

இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியிலும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக கருத்தாடல்கள் நடைபெற்று வருகின்றது. சிங்கள தரப்பிடமிருந்தும்கூட அது தொடர்பான கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான தமிழ் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் அவ்வாறான ஒரு பொது வேட்பாளரின் அவசியம் பற்றிப் பேசிவருகின்றன. சில கட்சிகளும் சில அமைப்புகளும் மாறுபட்ட கருத்துகளையும் ☞ 2

## கிளிநொச்சியில் சனியன்று மலையகம் 200 நிகழ்வு

மலையக மக்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு 200 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில் கிளிநொச்சியில் மலையகம் 200 நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஊடக சந்திப்பில் நிகழ்வு ஏற்பாட்டு குழுவினரின் சார்பில் பரமநாதன் குமாரசிங்கம், சுப்பிரமணியம் மோகனராசா ஆகியோர் தெரிவித்ததாவது:

மலையக மக்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து 200 வருடம் நினைவுகூரும் வகையில் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள மலையகம் 200 ☞ 9

## விதை உ.கிழங்கு பாதிப்பு குறித்து மேலதிக விசாரணைகள் தேவை

### வடக்கு ஆளுநர் வலியுறுத்து

யாழ். மாவட்ட விவசாயிகளுக்காகத் தருவிக்கப்பட்ட விதை உருளைக் கிழங்கில் பக்றீரியாத் தொற்று ஏற்பட்டது தொடர்பாக மேலதிக விசாரணைகள் தேவை என்று வலியுறுத்தியுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்.

பக்றீரியா தொற்றுடன் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்குகளை கட்டுநாயக்காவில் உள்ள காண்காணிப்பு பிரிவு (குவாரன்டைன் செக்ஸன்) வெளியே செல்ல அனுமதி வழங்கியது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டத்தில் விவசாயி ஒருவர், பக்றீரியா தொற் ☞ 8

## அசாதாரண மழை வீழ்ச்சியே டெங்கு பெருகக் காரணமாம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடரும் அசாதரணமான மழை வீழ்ச்சியே டெங்கு தொற்றின் தாக்கம் அதிகரிப்பதற்குக் காரணம் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிய நீர் உள்ள இடங்களிலும் டெங்கு நுளம்பு பெருகும் நிலை காணப்படுகின்றது கடந்த இரண்டு மாதங்களிலேயே இதன் தாக்கம் அதிகரித்துள்ளது. தாக்கத்துக்குள்ளாகும் நோயாளியை சீராக கண்காணித்து வந்தால் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதால் கண்காணிப்பதில் சற்று பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இதனால் இறப்பு வீதம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக ☞ 9

## அயல் மாவட்ட பி.எச்.ஐகளும் யாழ்ப்பாணத்துக்கு அழைப்பு

### டெங்குவைக் கட்டுப்படுத்த இந்த யோசனை

யாழ்ப்பாணத்தில் டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த அயல் மாவட்டங்களிலிருந்தும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களை (பிஎச்ஐ) வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுகூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

டெங்குவை ☞ 2

### பல்கலை மாணவி இறப்பு தொடர்பில்

## விசாரணை அறிக்கை கோருகிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும்போது டெங்கு காய்ச்சலால் உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக மாணவியின் இறப்புத் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த யாழ். பல்கலைக்கழக மாணவியின் இறுதிக் ☞ 2

### யுக்திய சுற்றிவளைப்புக்களால்

## பொதுமக்களுக்கு இடைஞ்சல் எனில் நீதிமன்றத்தை அவர்கள் நாடலாமாம்

யுக்திய சுற்றுவளைப்புக்களின்போது பொது மக்களின் உரிமைகள் மீறப்பட்டால் அது குறித்து நீதிமன்றத்தை நாடலாம் என்று நீதி அமைச்சர் கலாநிதி. விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரச திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது, பொலிஸாரின் யுக்திய சுற்றிவளைப்புகள் தொடர்பில் ☞ 2

### மருந்துப் பொருள் இறக்குமதி மோசடி தொடர்பில்

## அரச வைத்திய அதிகாரிகள் ஒன்றிய தலைவரிடம் அதிகாரிகள் விசாரணை

மருந்துகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் ருக்ஷான பெல்லனவிடம் குற்றப் புலனாய்வுத்திணைக்கள அதிகாரிகள் நேற்று 5 மணி நேரம் ☞ 9

## 15 மருந்துக் கொள்கலன்கள் வெளியேற அனுமதி இல்லை

### மருந்து நிறுவனங்களின் பதிவுச் சிக்கலால் இந்த நிலை

இறக்குமதி செய்யப்பட்ட 15 கொள்கலன் மருந்துகள் துறைமுகத்தில் விடுவிக்கப்படாத நிலையில் உள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர், வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டுப் பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட மருந்து கொள்கலங்கள் விடுவிக்கப்படாதுள்ளன. தனியார் துறையினர் இறக்குமதி செய்த மருந்துகள் அடங்கிய கொள்கலன்களே துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

குறித்த மருந்து நிறுவனங்களின் பதிவு உள்ளிட்ட பல ☞ 9

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு மூன்று உறுப்பினர்கள் நியமனம்

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

அதன்படி, அதன் தலைவராக நீதிபதி டபிள்யூ. எம். என். பி. இத்தவல நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய உறுப்பினர்களாக சேத்திய குணசேகர மற்றும் பேர்னாட் ராஜபக்ஷ ஆகியோர் ☞ 9

## இனி இது .....

யில்செல்லஅனுமதித்தார்நீதிவான்.

ஆலயத்தில் இருந்து காணாமற்போன அந்தத் தங்கத் தட்டு அம்பாந்தோட்டையில் உள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவருக்கு விற்கப்பட்டிருப்பதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கண்டுபிடித்திருக்கிறது. அதனை விற்றவர் யார் என்றால், அறங்காவலரின் மகள்தான் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

அந்தத் தங்கத் தட்டை 70 லட்சம் ரூபாய்க்கு விற்பதற்கு அந்த வர்த்தகருடன் பேரம் பேசினாராம். பின்னர் 50 லட்சம் ரூபாய்க்கு அதனை விற்றிருக்கிறார் என்றும் சொல்லப்படுகின்றது. அறங்காவலரின் சம்மதம் மற்றும் உதவியுடன்தான் இந்தப் பரிமாற்றம் நடந்ததா என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. அது தொடர்பில் விசாரணைகள் தொடர்கின்றன.

உள்ளே என்ன உருட்டு நடந்தது என்பதெல்லாம் ஆலயத்தின் உள்ளே இருக்கும் அவனுக்குத் தெரியும். மக்களுக்கும் விரைவில் எல்லாம் தெரியவரும் என்று நம்புவோம்.

................. .............. ...........

மருந்துக் கொள்வனவு மோசடி தொடர்பில் நடந்து வரும் விசாரணைகளில் இரு நாள்களுக்கு முன்னர் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினர் வாக்குமூலம் பதிவு செய்தனர். இந்த மோசடி தொடர்பான விசாரணைகளில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதன்பின்னர் அமைச்சரிடமும் விசாரணை நடத்தப்படும் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்திருந்தனர்.

இந்தப் பின்னணியில் தன்னிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பதிவு செய்வதற்கு வருமாறு அமைச்சரே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைப்பு விடுத்தாராம். அவரது அழைப்புக்கு ஏற்பவே அதிகாரிகள் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். அப்படி அதிகாரிகள் அமைச்சரிடம் விசாரணை நடத்தியபோது, அங்கு மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளரும் இருந்துள்ளார். அமைச்சரின் சட்டத்தரணி என்கிற போர்வையிலேயே அவர் அங்கு இருந்தார்.

மனிதர்களுக்கான தரமற்ற இமோகுளோபின் ஊசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டுக் குறித்தே பொலிஸ் அதிகாரிகள் அமைச்சரிடம் விசாரணை நடத்தச் சென்றிருந்தனர். அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட மருந்தின் தரத்தை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்புக்குரியது மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைதான். ஆனால், வெள்நாட்டு இறக்குமதி என்று கூறி ஆவணங்கள் சமர்ப்பித்து உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மருந்துகளை விற்று ஏமாற்றிவிட்டார்கள் என்கிற இந்த வழக்கில் பங்காளியாகப் பொறுப்பு ஏற்கவேண்டியவரே அமைச்சரின் இப்போதைய சட்டத்தரணி என்றால் விசாரணையின் கதி என்ன?

இதுதான் இப்போது கொழும்பில் சர்ச்சையாக வெடித்துள்ளது. இந்த மோசடி தொடர்பில் மருந்தை விநியோகித்த நிறுவனத்தின் உரிமையாளர், சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகத் திணைக்களத்தின் பணிப்பாளர், சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தா உள்ளிட்ட 6 பேர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அமைச்சரும் இந்த மோசடிக்குப் பொறுப்பானவர், அவரும் கைது செய்யப்படவேண்டும் என்று சுகாதாரதுறைத் தொழிற்சங்கங்கள் வலியுறுத்துகின்றன.

டிசெம்பர் 26 அமைச்சரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் அமைச்சரிடம் விசாரணை நடத்தியபோது மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைப் பணிப்பாளர்களில் ஒருவரான மனோஜ் கமகே அமைச்சரின் சட்டத்தரணியாக அங்கே அமர்ந்தி-ருந்தார். இது நெறிமுறையற்றது என்று தொழிற்சங்கங்கள் இப்போது கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளன.

பார்க்கலாம் இது எங்கே போய் முடியும் என்று.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## 60 சதவீத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 6.6 சதவீதம் பேர் கூடுதல் வருமானம் அல்லது கூடுதல் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

வருமானம் குறைந்துள்ள குடும்பங்கள் தம்மைக் காக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் கடன் வாங்குதல், நகைகளை அடமானம் வைப்பது மற்றும் பிறரிடம் உணவு அல்லது பணம் கேட்பது ஆகியவை அடங்கும்.

மாதாந்த செலவுகள் அதிகரித்துள்ள குடும்பங்களில் உணவுச்செலவு 99.1 வீதமும், போக்குவரத்துக் கட்டணம் 83 வீதமும் அதிகரித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் 22 வீதமான குடும்பங்கள் கடன் சுமையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொருளாதார நெருக்கடியால் 3 வயது முதல் 21 வயதுக்குட்பட்டவர்களில் 54.9 சதவீதத்தினரின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 53.2 சதவீதம் பேர் எழுதுபொருட்களுக்கான செலவீனத்தை குறைத்துள்ளனர் அல்லது தவிர்த்துள்ளனர் என்றும், 44 சதவீதம் பேர் புதிய சீருடைகளுக்கான செலவினங்களை குறைத்துள்ளனர் அல்லது அவற்றை வாங்குவதை நிறுத்தியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக் காலத்தில் சுமார் 29 வீதமானவர்கள் நோய்களால் உயிரிழந்துள்ளனர் அவர்களில் 7 வீதமானவர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக சுகாதார சிகிச்சை பெறும் நடைமுறையை மாற்றியமைத்துள்ளனர்.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் பொருளாதார நெருக்கடி தொடங்கியதாகவும், அது கொவிட் தொற்றுநோயுடன் மிகவும் கடுமையானதாக மாறியதாகவும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது.

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரியைகள் மாவிட்டபுரம் சாயோடையிலுள்ள அன்னாரது இல்லத்தில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்கும் 25 வயதான மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ள நிலையில் மாணவியின் இறப்பில் சந்தேகம் நிலவுவதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, காய்ச்சலினால் டிசெம்பர் 19 தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மாணவி, டிசெம்பர் 22 யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். டிசெம்பர் 23 இரவு 11 மணிக்கு மாணவி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, வாந்தியைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட மருந்தினால் ஏற்பட்ட ஒவ்வாமையே அவரது உயிரிழப்பிற்கான காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகங்கள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றதோடு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மாதிரிகள் மேலதிக ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## அயல் மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவும் நுளம்புகள் வீரியம் மிக்க நுளம்புகளாக உள்ளதாக பூச்சியியல் ஆய்வ சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே அதனை ஒழிக்க தீவிரமான நடவடிக்கைகள் அவசியம்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இருப்பதால் அதனை சூழவுள்ள பகுதிகளிலுள்ளவர்கள் அதிகளவாக அக்கறையுடன் இருக்க வேண்டும். டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்த அயல் மாவட்டங்களிலிருந்தும் சுகாதாரப் பரிசோதகர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது பரவிவரும் டெங்கு தொற்றானது மூன்றாவது வகை நுளம்பின் மூலமே பரவிவருகின்றது. இது இம்முறையே யாழ்ப்பாணத்தில் பரவத் தொடங்கியுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் இதற்கான தற்காப்பு வளங்கள் இல்லாதுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நாளாந்தம் 150 பேர் டெங்கு சிகிச்சைக்காக வருகின்றனர். புதன்கிழமை மட்டும் 84 பேர் விடுதிகளில் சேர்க்கப்பட்டனர். அத்துடன் இம்மாதம் 1,284 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் - என்றார்.

## தமிழ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்றன.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியைச் சார்ந்த ஈபிஆர்எல்எவ், ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் ஆகியோர் தமிழ் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அந்த யோசனைக்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இது தொடர்பாக ஒருமித்த கருத்து இல்லாமல் தலைமைச் செயற்பாட்டாளர்களாக இருக்கின்றவர்கள் ஊடகங்களில் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த கஜேந்திரகுமார் இந்த யோசனையை நிராகரித்து, ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வருகின்றார்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி வேட்பாளர்களுடன் சில பேச்சுக்கள் நடைபெற்று அதற்கிணங்க தமிழ் மக்கள் வாக்களித்திருந்தாலும்கூட, பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தவில்லை என்பதே உண்மையான நிலைப்பாடாகும். அது மாத்திரமல்லாமல், போர் முடிந்து பதினான்கு வருடங்கள் கழிந்த பின்னரும் இலங்கையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த முதன்மையான பிரச்சினையாகத் திகழும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான எத்தகைய நடவடிக்கைகளையும் இவர்கள் மேற்கொள்ளவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோம் என்று அறிவிக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திசநாயக்க, பாட்டளி சம்பிக்க ரணவக்க ஆகியோரும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக எந்தவிதமான முன்மொழிவுகளையும் முன்வைக்கவில்லை.

அதேசமயம் ஜனாதிபதியாகவந்த ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு ஆண்டுகளில் நான்கு அல்லது ஐந்துமுறை தமிழர் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடி பல உறுதிமொழிகளைக் கொடுத்தும் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. குறைந்தபட்சம் அரசமைப் பில் இருக்கக்கூடிய பதின்மூன்றாவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்குக்கூட 2025ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்பு 2026இல் அதுபற்றி ஆலோசிக்கலாம் என்று கூறியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில்தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆலோசிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் சிங்கள பெரும்பான்மை வாக்குகள் அதிகள வில் சிதறக்கூடிய நிலை தோன்றியுள்ளதால் எந்தவொரு வேட்பாளரும் தனித்து நின்று ஐம்பது வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருக்கும். இத்தகைய பின்புலத்தில் தமிழ் மக்கள் ஒருமித்து ஒன்றாகச் செயற்பட்டு தமக்கு இருக்கக்கூடிய ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை ஒரு பேரம் பேசும் வாக்குகளாக மாற்றிக்கொள்வதற்கு முயற்சிசெய்வதன் மூலம் இவர்களிடமிருந்து சில உரிமைகளையாவது பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கலாம்.

தமிழ் தரப்பிலிருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது என்ற கருத்தாடல்கள் சிங்கள அரசியல் கட்சிகள் மத்தியில் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இந்த சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது என்ற கருத்தை புறந்தள்ளுவதே தமிழர் தரப்பிற்கு நன்மைபயக்கும்.

சிங்கள தலைமைகள் யாரையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற விடயத்தை தெளிவுபடுத்தும் விதமாக தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதன் மூலம் உள்நாட்டிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் பல விடயங்களைச் சூசகமாகச் சொல்லமுடியும்.

இதுவரைகாலமும் தமிழ் அரசியல் தலைமைகள் சிங்கள தரப்புகள் அல்லது அரச தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிர்வினை ஆற்றிவந்துள்ளதே தவிர, தமிழர் தரப்பினரின் அபிலாசைகளுக்கு ஏற்றவாறு சிங்கள தலைமைகளை மாற்ற முடியவில்லை. ஆனால் இந்த ஜனாதிபதி தேர்தல் ஏற்படுத்திக் கொடுத்துள்ள சாதகமான சூழ்நிலையை, தமிழ் மக்கள் ஒன்றிணைந்து தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான அனுகூலமான சூழலாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும் என்பதே எமது முக்கியமான வேண்டுகோளாகும்.

நாங்கள் ஒன்றுபட்டு தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறாமல் கையாளுவதன் ஊடாக, சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களை எமது நிகழ்ச்சிநிரலை நோக்கி வரவழைக்க முடியும். இதனை இப்பொழுதே நாங்கள் தொடங்கவேண்டும். திரு. சம்பந்தன் அவர்கள் கூறுவது போன்று தேர்தல் அறிவிக்கும் வரையிலும் வேட்பாளர் அறிவிப்பு வெளியாகும் வரையிலும் காத்திருந்து கடைசி நிமிடத்தில் இதனைச் செய்ய முடியாது. இப்பொழுதிருக்கின்ற சூழ்நிலையில் தமிழரசுக் கட்சி முரண்பட்ட கருத்துகளைத் தெரிவிப்பதை விடுத்து, தீர்க்கமான சாதகமான முடிவினை எடுக்குமாக இருந்தால், தமிழ் மக்களின் பேரம்பேசும் சக்தியை ஓரளவிற்கேனும் வலுப்படுத்த முடியும்.

மேற்கண்ட விடயங்களுக்கும் அப்பால் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது மேலும் பல சாதகமான விடயங்களையும் உள்ளடக்கியிருந்தாலும் அவை அனைத்தையும் இன்றைய சூழ்நிலையில் பொதுவெளியில் விவாதிக்கமுடியாது. தமிழ்மக்களின் வாக்குகளை நாம் சிதறவிடாமல் ஒன்றுபட்டு பிரயோகிப்பதில் தீர்மானமாக இருந்தால் நாம் அனைவரும் கூடிப்பேசி இதனை இன்னமும் ஆரோக்கியமான முறையில் முன்னெடுக்க முடியும். அரசியல் ரீதியாகக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவவிடுவது புத்திகூர்மையாகாது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# விவசாயப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தை நிறுத்தக்கோரி ஆர்ப்பாட்டம்





கிழக்கு மாகாண விவசாயத்திணைக்களத்தின் மட்டக்களப்பு பிரதி (விரிவாக்கல்) விவசாயப்பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரி புதன்கிழமை மட்டக்களப்பில் அமைந்துள்ள அவ் அலுவலகத்துக்கு முன்னால் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பு பிரதி (விரிவாக்கல்) விவசாயப்பணிப்பாளராக முன்னர் கடமையாற்றிய மு.பரமேஸ்வரன் மீண்டும் மட் டக்களப்பில் கடமை ஏற்பதை எதிர்க்கிறோம் என்ற தலைப்பிட்ட பதாதையை தாங்கியவாறு விவசாயிகள் கவனஈர்ப்பில் ஈடுபட்டனர். இதன்போது தற்போது கடமையிலுள்ள பிரதி விவசாயப்பணிப்பாளரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். கவனஈர்ப்பின் இறுதியில் கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு வழங்குவதற்கான கடிதம் ஒன்றைஷ்யும் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் கையளித்தனர். ஏற்கனவே கடமையாற்றி வரும் பிரதி விவசாயப் பணிப்பாளர் மேற்கொண்ட திட்டங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும், அதனால் தங்களது விவசாயங்கள் பாதிப்படையும் எனவும், புதிதாக நியமனம் வழங்கப்பட்டவர் முன்னர் கடமையாற்றி பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இடமாற்றம் வழங்கப்பட்டவர். விவசாயம் பாதிக்கப்படும் நிலை உருவானால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தெரிவித்தனர். (05)

## மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட கைதிகள் உடல்நிலை முன்னேற்றம்

மூளைக் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாத்தறை சிறைக் கைதிகளின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மாத்தறை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் உபாலி கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி எட்டு நோயாளிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் 23 ஆம் திகதி மேலும் ஒன்பது நோயாளிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்ட மூவர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர் என வைத்தியர் உபாலிகருணாரத்ன தெரிவித்தார்.

இந்த நோயாளர்களுக்கு வாந்தி, வயிற்று வலி, தலைவலி, வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டன எனவும் நோயாளிகளிடமிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு அவற்றின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றனர் எனவும் வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் உபாலி கருணாரத்ன தெரிவித்தார். (05)

## ஜோர்தானில் சிக்கித் தவிக்கும் 350 இலங்கைப் பிரஜைகள்



ஜோர்தானில் சஹாபி பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் சுமார் 350 இலங்கையர்கள் சம்பளம் வழங்கப்படாமையால் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த ஆடை தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்களுக்கு கடந்த 18 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. இதன்காரணமாக தங்களுடைய தங்கும் விடுதிகளில் உணவு மற்றும் தண்ணீரின்றி சிக்கித் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சிலர் கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தங்களது நிலைமை குறித்து ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு தெரியப் படுத் தப்பட்டபோதிலும், இதுவரை எவ்விதவிசாரணை நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் காணொளி மூலம் அவலநிலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே, உயிரிழப்புகள் ஏற்படும் நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் தம்மை நாட்டுக்கு அழைத்து செல்லுமாறு இலங்கை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

## யானை தாக்கியதில் ஒருவர் பரிதாப சாவு



அம்பாந்தோட்டை, ரன்மினிதென்ன பிரதேசத்தில் யானை தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பலாங்கொடை பிரதேசத்தை சேர்ந்த எச்.எம்.டி. சந்திரசேன என்ற 62 வயதுடையவராவார். இவர் மூன்று நாள்களுக்கு முன்னர் தனது மருமகனின் வீட்டிற்கு வந்த நிலையில் மருமகனின் பண்ணையை பாதுகாத்துக்கொண்டிருக்கும்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (05)

## கூரிய ஆயுதம், இரும்பு கம்பியால் தந்தை, மகன் இருவர் மீது தாக்கு

தனமல்வில பிரதேசத்தில் தந்தை மற்றும் மகனை இனந்தெரியாத இரு நபர்கள் கூரிய ஆயுதங்கள் மற்றும் இரும்பு கம்பியால் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் 15 வயதுடைய சிறுவன் மற்றும் 56 வயதுடைய தந்தையாவார்.

இவர்கள் காயமடைந்த நிலையில் தனமல்வில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் தந்தை மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் மற்றொருவர் தப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)


## வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வவுனியாவில் ரூ. 22 லட்சம் தண்டம்

வவுனியாவில் 2023 ஆம் ஆண்டில் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக 22 லட்சத்து நாற்பதாயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி சத்துர வன்னி நாயக்க தெரிவித்தார். இது குறித்து மேலும் தெரி விக்கையில் –

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்கள் மற்றும் சோதனை நடவடிக்கைகளின் போது 771 வியாபார நிலையங்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் நிறுவன முகவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. இவ் 771 வழக்குகளும் காலாவதியான பொருள்களை விற்பனை செய்தல் காட்சிப்படுத்துதல், விலை காட்சிப்படுத்தாமல் பொருள்களை விற்பனை செய்தல், கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலையில் பொருள்களை விற்பனை செய்தல் போன்ற பல்வேறு விடயங்களுக்கு எதிராகவே பதிவு செய்யப் பட்டுள்ளதாகும்.

இதேவேளை, பாவனையாளர்கள் அதிகார சபையால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், பொலிஸார், அரச அலுவலகர்கள் என பல தரப்பினருக்கும் பாவனையாளர் உரிமைகள், பாவனையாளர் கடமைகள், பாவனையாளர் சட்டங்கள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நபர் யாழில் கசிப்புடன் கைது



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் 15 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கோண்டாவில் கொட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த நபரே கோப்பாய் பொலிஸாரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குறித்த நபருக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்நிலையில், வழக்கு தவணைகளுக்கு மன்றில் முன்னிலையாகாத மூன்று வழக்குகளுக்கு எதிராக நீதிமன்றங்களால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் கோண்டாவில் பகுதியில் பதுங்கியுள்ளதாகக் கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன், கைது செய்யப்படும் போது, அவரது உடைமையில் இருந்து 15 லீற்றர் கசிப்பையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

## நுளம்புக்குப் புகை போட்ட முதியவர் தீப்பற்றிச் சாவு

*யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த நுளம்புக்கு புகைப்போட்ட முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*சின்னத்துரை செல்வநாயகம் (வயது 75) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -*

*கடந்த 19 ஆம் திகதி குறித்த முதியவர் மண்ணெண்ணெய் ஊற்றி நுளம்புக்கு புகைபோட்டுள்ளார். இந்நிலையில் அவரது உடையில் தீப்பற்றியது. இந்நிலையில் அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.*

*இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் புதன்கிழமை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நாம் தயாரா?

உலகில் காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய ஆபத்தில் உள்ள இரண்டாவது நாடாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது. தோராயமாக, இலங்கையின் மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் தீவின் மேற்கு, தெற்கு மற்றும் தென்மேற்கில் உள்ள தாழ்வான கடலோரப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். வெப்பநிலை உயர்வு காரணமாக எதிர்காலத்தில் கடல் மட்டம் உயரும்போது இந்த மக்கள் பெரும் ஆபத்துக்களை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. காலநிலை மாற்றம் தீவின் பல்லுயிர் பெருக்கத்தையும் அச்சுறுத்துகிறது

வடக்கு மாகாணம் மற்றும் வடமேல் மாகாணம் போன்ற கரையோரப் பிரதேசங்கள் காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்படக்கூடியவை. இந்த கடல்சார் மாகாணங்கள் தீவில் மிகவும் அடர்த்தியான மக்கள்தொகையைக் கொண்டவை. சிக்கலைப் புறக்கணிப்பது விவசாய உற்பத்தியைப் பாதிக்கும், வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற பேரழிவுகளையும் கொண்டுவரலாம், இதன் விளைவாக தொற்று நோய்கள் பரவுவது அதிகரித்து, இறுதியாக வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படக்கூடும்.

இலங்கை இரண்டு பருவமழைக் காலங்களை அனுபவிக்கிறது – வைகாசி முதல் ஆவணி வரையிலான தென்மேற்குப் பருவமழை மற்றும் நவம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கு இடையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் ஏற்படும் வடகிழக்கு பருவமழை. இந்த ஆண்டு, தென்மேற்கு பருவமழை புரட்டாதி மாதம் வரை விரிவடைந்ததால் மழை வீழ்ச்சியில் வித்தியாசத்தை உணர முடிந்தது.

கனமழையால் பரவலான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கம்பஹா, மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்னர். உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

13 மாவட்டங்களில் 20,450 குடும்பங்களைச் சேர்ந்த 75,000 இற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர். இலங்கைச் செஞ்சிலவைச் சங்கத்தின் ஆரம்ப மதிப்பீட்டின்படி, 7,500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்களை இழந்துள்ளனர்.

இந்த மார்கழி மாதம் தொடர்ந்து பெய்த மழை காரணமாக வடமாகாணத்தில் இதுவரை 4,482 பேரும், திடீர் வெள்ளம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 1,626 பேரும், வவுனியா மாவட்டத்தில் 138 பேரும், மன்னார் மாவட்த்தில் 2,245 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ள நீர் விரைவில் வடியாவிட்டால் பெரும் போக நெற் பயிர்கள் முழுவதுமாக அழிந்துபோகலாம் என அஞ்சப்படுகிறது.


உலகளாவிய காலநிலை அபாய சுட்டெண்ணில், இலங்கை மிக உயர்ந்த இடத்தில் உள்ளது . குறிப்பாக காலநிலை மாற்றம் தொடர்பாக. புவி வெப்பமடைதலின் விளைவுகளால் ஏற்படும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் உலகின் இரண்டாவது மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடாக இந்த நாடு அடையாளம் காணப்பட்டுள்ளது.

நாம் ஒரு பெரிய காலநிலை மாற்ற பிரச்சனையை எதிர்கொள்கிறோம். வெள்ளம், நிலச்சரிவு போன்ற நிகழ்வுகள் நம்மைச் சுற்றி அடிக்கடி நிகழ்கின்றன. அண்மைக் காலமாக நில அதிர்வுகளையும் அடிக்கடி உணரத் தொடங்கியுள்ளோம். 2022இல் பொருளாதாரச் சரிவை ஏற்படுத்தியதைப் போலவே இந்தப் பிரச்சினையின் பெருகிவரும் ஆதாரங்களை அவர்கள் புறக்கணிக்கிறார்களா என்ற பலத்த சந்தேகம் எழுகின்றது.

காலநிலைப் பாதிப்பால் ஏற்படப்போகும் ஆபத்துக்களை எதிர்கொள்ள நாம் இன்னும் தயாராகவில்லை என்றே தோன்றுகின்றது. இந்தப் பாதிப்புக் குறித்து அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொது மேடைகளில் அதிகம் பேசுகின்றார். அ–து டொலர்களைப் பெறும் வருமான வழியாக காலநிலைப் பாதிப்பைப் பார்ப்பதைக் குறிக்கிறதே தவிர, உருப்படியான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் குறிப்பிடவில்லை.

இந்தப் பிரச்சினை குறித்து ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் போதிய அக்கறை செலுத்தவில்லை எனில் மோசமான விளைவுகளை எதிர்கொள்ளவேண்டி வரும்.

# அரசியல் தெளிவு



என் சத்திய மூர்த்தி

புலிக்கு பயந்தவர்கள் எல்லாம் என் மீது படுத்துக்கொள்ளுங்கள் என்ற விதத்தில், விக்னேஸ்வரன் ஓர் அறிவிப்பை விடுத்துள்ளார். அதாவது, அனைத்து தமிழ் கட்சியினரும் ஏற்றுக்கொண்டால், தான் புத்தாண்டில் ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்க தயார் என்று அவர் கூறி உள்ளார். அவர் வேட்பாளரோ இல்லையோ, தமிழர் தரப்புக்கான ஒருங்கிணைந்த வேட்



பாளர் என்ற கருத்து குறித்து அடுத்த கட்ட விவாதங்கள் தொடங்கப்படவேண்டும். அதன் முடிவு என்னவோ தெரிந்த விடயம்தான். நம்மவர்களாவது ஒன்றாக நிற்பதாவது.

பொது தமிழ் வேட்பாளர் என்ற கருத்து குறித்த முதல் அறிவிப்பை, தமிழ் ஜனநாயக கூட்டணி என்ற பெயரில் செயல்படும் உதிரி கட்சிகள் விடுத்து சில கிழமைகள் சென்றுவிட்டன. ஆனால், அவர்களது செயல்பாடுகளில் முன்னேற்றம் இன்மையால், விக்னேஸ்வரனின் கூற்று ஏதோ ஒரு புதிய கருத்தாக உருவெடுத்துள்ளது. ஆனால், எதிர்வரும் சில வாரங்களுக்கு, தமிழ் அரசு கட்சியின் புதிய தலைவர் தேர்தல் குறித்த செய்தி மட்டுமே தமிழர் தரப்பில் களைகட்டப் போகிறது.

அதன் பின்னர் கட்சியில் பல்வேறு பிரிவுகள் உதயமாகும் வாய்ப்புகள் அதிகம். அண்மைக் காலம்வரை, சம்மந்தனின் ஆளுமைக்கு மட்டுமே, கட்டுப்பட்டு வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இல்லாமலான பிறகு, தமிழ் அரசு கட்சிக்குள் இது போன்ற உள்குத்து அரசியலுக்குமே நேரம் சரியாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் குறித்து தமிழ் அரசு கட்சியில் சிலருக்கு அக்கறை இருந்தாலும், அது குறித்து விவாதித்து முடிவெடுக்கும் அளவிற்கு ஒற்றுமை இருக்குமா, என்பது கேள்விக்குறி. தமிழ் அரசுக் கட்சி தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், புதிய தலைமை எடுக்கும் முடிவை எதிர்ப்பதே தங்களது தலையாய கடமை என்று தோல்வியுற்ற அணியினர் கருதிச் செயல்படுவார்கள்.

கட்சியின் புதிய தலைவர் ஒருமித்த தமிழ் வேட்பாளர் என்று கூறினால், பிறர் அவரை எதிர்க்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக ஒரு தென்னிலங்கை சிங்கள வேட்பாளரை ஆதரிப்பதாக அறிவிப்பார்கள். தமிழ் அரசு கட்சிக்கு அப்பாலும், தமிழர் அரசியலில் இந்த சிங்கள ஆதரவு விளையாட்டு தொடரும்.

கடந்த வருடம் நாடாளுமன்றம் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்த போதே, தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கையூட்டுப் பெற்றுக்கொண்டு, அவருக்கு ஆதரவு தெரிவித்தார் என்று தென்னிலங்கை பத்திரிகைச் செய்திகள் உறுதியாக கூறின. அவ்வாறு பெயர் கூறப்பட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது, தமிழ் அரசு இல்லாத ஜனநாயக கூட்டணியில் பங்காளிகள்.

### பொது வேட்பாளர்

தமிழ் பொது வேட்பாளர் என்பதற்கு அப்பாலும், தமிழர் கட்சிகள் தேசிய அரசியலில் புதிய மாற்றங்களைக் கொண்டு வரலாம். ஆதற்கு முயற்சி செய்யவேண்டும். தற்போதைய சூழலில், தமிழர் தரப்பு வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவது துர்பலமே.

தமிழர் தலைமைகள், கவனமாகக் காய் நகர்த்தினால், அதன் முடிவுகள் வேறு மாதிரியாக இருக்கும். அதற்காக, தமிழ் வேட்பாளர் வெற்றிபெற்று விடுவார் என்பதல்ல பொருள். மாறாக, தமிழர் தரப்பு வாக்காளர் என்பதற்கும் அப்பால் சென்று, தமிழ் பேசும் இனத்தவர்களின் பொது வேட்பாளர் என்று ஒரு வரை களமிறக்க முடியுமா, என்பதையும் ஆராய வேண்டும்.

அதுவிக்னேஸ்வரானக்கூட இருக்கலாம். ஆனால், அதற்கான முயற்சிகளையும் முஸ்தீபுகளையும் எடுப்பதற்கான தமிழ் தலைமை தற்போது இல்லை என்பது வருத்தப்படவேண்டிய உண்மை. வாய்ப்புகிடைத்தபோதெல்லாம். ராஜபக்ச–எதிர் வேட்பாளரை ஆதரித்த தமிழ் தலைமைகள், தங்களது வாக்கு வங்கிகளுக்கே பங்கம் விளைவித்துக் கொண்டன. தனி வேட்பாளரைக் களம் இறக்கும் முயற்சியை முந்தைய தேர்தல்களிலேயே எடுத்திருந்தால், சம்மந்தனே அதற்குத் தகுதியானவராக இருந்திருப்பார்.



அந்த வகையில், சிறுபான்மை இனத்தவர்களின் கூட்டு முயற்சிகளும் வரவேற்கத்தக்க அளவிற்கு முன்னேறியிருக்கலாம். ஆனால், தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரையே முன்னிலைப்படுத்துவது என்ற சம்மந்தனின் அரசியலால் இன்று தமிழ் சமுதாய வாக்குவங்கி என்பதே காணாமல் போய் விட்டது.

சம்மந்தனின் வயது –மூப்பு மற்றும் சுகவீனம் காரணமாக, தமிழ் பேசும் மக்களின் பொது வேட்பாளர் குறித்த ஒருமித்த கருத்தைத் தோற்றுவிற்பதற்கு, விக்னேஸ்வரனே முன்னிலை வகித்திருக்கலாம். ஆனால், பிள்ளையார் சுழி போடுவதற்கு முன்னரே, தான் அந்த பிள்ளையாராக இருக்கவேண்டும் என்ற அவரின் அறிவிப்பு காரணமாக, அவர் இரண்டிற்குமே தகுதி இல்லாதவராகிறார். என்றாலும், இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம்.

அதற்கு சரியான அரசியல் தலைமை இல்லை என்றாலும், தமிழ் சமூக தலைமைகள் ஒருங்கிணைந்து முயற்சிகளை மேற்கொள்ளலாம். பிறிதொரு கட்டத்தில், அதில் தமிழ் அரசியல் தலைமைகளை இணைத்துக்கொள்ளலாம். அல்லது அவர்களிடம் பொறுப்பை கையளித்துவிட்டு, சமூக தலைமைகள் உத்தியோகபூர்வமாக விலகிக் கொள்ளலாம்.

### குண்டுச் சட்டிக்குள் குதிரை

இதற்காக ஒரு கட்டத்தில் தமிழ் பேசும் முஸ்லீம் கட்சிகளின் தலைமை மற்றும் சமுதாய தலைமைகளுடன் பேச்சு நடத்தப்பட வேண்டியதும் கட்டாயம். அது போன்றே மலையகத் தமிழர்களின் ஆதரவை பெற முயற்சிப்பதும் மிக, மிக அவசியம்.

இவ்வாறான முயற்சிகளை யார் முன்னெடுத்தாலும், அவர்கள் தமிழர் மற்றும் பிற தமிழ் பேசும் சமூகத்தினரில் எந்தவொரு தரப்பினரையும் விட்டுவிடக்கூடாது. சில, பல அரசியல் கட்சிகள், அரசு ஆதரவு நிலைமையில் தொடரும்போது, அவர்களை எவ்வாறு உள்வாங்கிக் கொள்வது என்பதில் குழப்பம் இருக்கக்கூடாது.

அவ்வாறே தொடருமென்றால், அத்தகைய முயற்சிகள் மீண்டும் ராஜபக்ச எதிர்ப்பு அரசியல் என்ற குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதாகவே அமையும். அந்த விதத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமனாதனையும் இத்தகைய முயற்சிக்கு பங்களிக்க அழைப்பதில் தவறொன்றும் இல்லை. அவர்கள் பங்கு பெறவில்லை என்றால், அது அவர்களின் முடிவு.

மலையக தமிழர்கள் விடயத்திலும், அரசு ஆதரவாக அமைச்சர் ஜீவன் தொண்டமான், எதிராக மனோகணேசன் போன்றோரும் அரசியல் செய்கின்றனர். முஸ்லீம் தரப்பிலோ, ரவுப் ஹக்கீம் உள்ளிட்ட பெருவாரியான தலை வர்கள், சஜித் தலைமையை ஆதரிக்கிறார்கள். இவை அனைத்துமே பிரச்சினையான விடயங்களே. ஆனால், பழையன மறந்து, புதியன புகுத்தலே இந்த மூன்று சிறுபான்மையின மக்களுக்கும் பயனளிக்கும் என்பதை அவர்கள்

(7ஆம் பக்கம் பார்க்க...)

# மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னால் அதிபர்கள் போராட்டம்

## யாழ்ப்பாணத்தில் நடந்தது






இலங்கை அதிபர் சேவை சங்கத் தின் ஏற்பாட்டில், வடமாகாணத்தில் அண்மையில் அதிபர் சேவைகள் நியமனத்தில் முறைகேடு உள்ளதாக தெரிவித்து தமக்கான நியமனம்சரியாகவழங்கவேண்டும்எனவும், அதற்காக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு அதற்கான நிவாரணத்தினை பெற்றுதரக்கோரி கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முன்னால் இலங்கை அதிபர் சேவை சங்கத்தின் தலைவர் சிரச ஆரியவர்த்தன தலைமையில், வடமாகாண யாழ்ப்பாண மாவட்ட அதிபர் தரத்திற்கு உள்வாங்கப்பட்ட அதிபர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதில் இலங்கை அதிபர் சேவை சங்கத்தின் தலைவர் சிரச ஆரிய- வர்த்தனவால்எட்டுஅம்சகோரிக்கைகள் அடங்கிய மகஜர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரி.கனகராஜிடம் கையளிக்கப்பட்டது.

அதில் இலங்கை அதிபர் சேவை சங்கத்தின் நிறைவேற்றுகுழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிபர் தரத்தினர்கள் பலரும் கலந்துகொண்டதுடன், இவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்திலும் மகஜரையும் கையளித்தனர் என இலங்கை அதிபர் சேவை சங்கத்தின் தலைவர் சிரச ஆரியவர்த்தன தெரிவித்தார். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# திருட்டு சந்தேகநபர்கள் 7 பேர் கைது 18 பவுண் தங்க நகைகளும் மீட்பு

யாழ்ப்பாணம்- வல்வெட்டித்துறையில் வசிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்றகளவுச்சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் உள்ளிட்ட 7 பேர் பொலிஸாரால், கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 16 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர், மன்னாரைச் சேர்ந்த 2 பேர் மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் என 7 பேரே கைதுசெய்யப்பட்டு, வல்வெட்டித்துறையில்தடுத்துவைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி வல்வெட்டித்துறைபகுதியில்வசிக்கும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் வீட்டில் நடந்த களவுச் சம்பவத்தில் ஐந்தரை லட்சம் ரூபா பணமும் 16 பவுண் நகைகளும் களவுபோயுள்ளது. அதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் களவில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 19 வயதான போதைக்கு அடிமையான இளைஞன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்அடிப்படையில், நகைஅடகுவைத்தவர்,நகையை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுக்களின் கீழ் பெண் உள்ளிட்ட ஏனையோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டநபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# புலிகளின் சின்னம் பொறித்துள்ள ஆடை அணிந்த யாழ். இளைஞனுக்குப் பிணை

மாவீரர்தினம்அன்று, கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு விடுதலைப்புலிகளின் சின்னம் மற்றும்விடுதலைப்புலிகளின்தலைவர் பிரபாகரனுடைய படம் பொறித்த ஆடையுடன் வந்த இளைஞனை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

சாவகச்சேரி நீதிமன்றில் குறித்த வழக்கு புதன்கிழமை எடுக்கப்பட்ட போது, கடந்த ஒரு மாதகாலமாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த இளைஞன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞரை பிணையில் விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த இளைஞரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (05)

# பாடசாலையின் சொத்துக்களைச் சேதப்படுத்தி 8 லட்சம் ரூபா பொருள்களை திருடிய மாணவர்

முந்தல் பிரதேசத்தில் உள்ள சிங்கள பாடசாலை ஒன்றின் அலுவலக அறைகளை உடைத்து நுழைந்து அங்கிருந்த சொத்துக்களை சேதப்படுத்தி கணினிகள் உட்பட 8 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய சந்தேகத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் முந்தல் பொலிஸாரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தமாணவர்களிடம்நடத்தியவிசாரணையில் திருடப்பட்ட பொருள்களின் ஒரு பகுதியும் மீட்கப் பட்டுள்ளது. (05)

# மிரிஹான பாண் விற்பனை ஓட்டோவில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

மிரிஹான பிரதேசத்தில் ஓட்டோவில் பாண் விற்பனை செய்வதுடன் போதைப்பொருள் விற்பனை செய்ததாகச் சந்தேகிகப்படும் நிலையில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடத்திலிருந்து 28 போத்தல்கள் அடங்கிய 37,000 லீற்றர் நிறையுடைய சட்டவிரோத மதுபானம் , 1,200 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் என்பன பொலிஸாரால்கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மிகவும் தந்திரமான முறையில் ஓட்டோவின் பின்புறத்தில் போதைப்பொருள்களை மறைத்து வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கண்டியில் அடுத்தடுத்து வீழ்ந்த இரு மரங்கள்: 8 வாகனங்கள் பலத்த சேதம்; இருவர் காயம்

*கண்டி, திலக் ரத்நாயக்க மாவத்தையில் இரண்டு பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததில், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 8 வாகனங்கள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.*

*புதன்கிழமை காலை 11 மணியளவில் அடுத்தடுத்து இருந்த இந்த மரங்களே இவ்வாறு வீழ்ந்துள்ளன. கனமழை காரணமாக இந்த மரங்களின் வேர்கள் அழுகிவிட்டன எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.*

*இதனால், அந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிகள், கார்கள், வான்கள், ஓட்டோக்கள் உட்பட 8 வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளதுடன், காயமடைந்த இருவர் கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*(05)*

# காட்டு யானை தாக்கி ஒருவர் அம்பாந்தோட்டையில் இறப்பு

அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு சென்றுகொண்டிருந்த நபரொருவர் அம்பாந்தோட்டை -லுனுகம்வெஹர பகுதியில் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அம்பாந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த ஏ. குணதாச என்ற 69 வயதுடையவராவார்.

இவர் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் மருந்து எடுப்பதற்காக அதிகாலையில் பஸ் நிலையத்திற்குசென்றுகொண்டிருக்கும் போது வீதியில் வந்த காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## விதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுடன் வழங்கப்பட்ட விதை உருளைக்கிழங்குகளைபயன்படுத்த முடியாது என்று தெரிவித்தார். அதனைப் பயன்படுத்தினால் மண் வளம் நாசமாகிவிடும் என்பதுடன் அதன் தாக்கம் மிக மோசமானதாக எதிர்காலத்தில் இருக்கும் என்ற விடயத்தினையும்வெளிப்படுத்தினார். விதைக் கிழங்குகளின் இழப்பால் தமது விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பதிலளித்த வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வி.விஜிதரன், நடந்தது என்ன என்பதை அறிந்துகொள்ள கட்டுநாயக்கவில் உள்ள கண்காணிப்பு சேவைப் பிரிவின் பதிலை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். குறிப்பாக, அவர்களின் பதிலை வைத்தே விதை உருளைக்கிழங்குகளை முழுமையாகஅழிப்பதாஇல்லையா என்பதை தீர்மானிக்க முடியும் என்றும் தெரிவித்தார். அழிப்பதாக இருந்தால் அதனை முழுமையாக அழித்தாக வேண்டும். அவ்வாறு அழிக்காதுவிட்டால்பற்றீரியாதொற்று வெளிப்பரவும் நிலையேற்படும். அதனைதடுப்பதற்காககிழங்குகளை முழுமையாக பிரத்தியேகமான பகுதியில்வைத்துஅழிக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த விதை உருளைக் கிழங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான நிதி எங்கிருந்து கிடைத்தது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

உலக வங்கியின் நிதியளிப்பின் கீழ்த்தான் அவை வாங்கப்பட்டன என்று வடமாகாண விவசாயத்திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பதிலளித்தார்.

இதனையடுத்து. இந்தப் பிரச்சினை குறித்துக் கருத்துத் தெரிவித்த வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்தெரிவித்ததாவது:

கட்டுநாயக்காவில் உள்ள கண்காணிப்பு சேவைப் பிரிவானது (குவாரன்டைன் செக்சன்), பற்றீரியா இருக்கலாம் என்ற சந்தேகத்துடன் எந்தவொரு பொருளையும் வெளிவருவதற்கு அனுமதிக்காது. அதேநேரம், குறித்த உருளைக் கிழக்கு விதைகள், கப்பலில் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்பகிறது. அவ்வாறு கப்பலில் கொண்டுவரப்பட்டால் எவ்வாறு கட்டுநாயக்கவுக்கு செல்லும்?

கொள்கலனின் கொண்டுவரப்பட்டுள்ளததாக காண்பிக்கின்ற நிலையில், கண்காணிப்பு பிரிவு வித்தியாசமான அவதானங்களை வெளிப்படுத்தியுள்ளதா?

ஆகவே கண்காணிப்பு பிரிவினை குற்றம் சாட்டுவதாக இருந்தால்விதைஉருளைக்கிழங்கு சம்பந்தமான முழுமையான அறிக்கையைநாம்பெறவேண்டும்.

பூக்கள்கொண்டுவரப்பட்டால்கூட உரியஅவதானங்களுடன்அறிக்கை சமர்ப்பித்த பின்னர்தான் அதனை வெளியே விடுவார்கள். ஆகவே, கண்காணிப்பு சேவை பற்றி எனக்கு கற்பிப்பதற்குவருகைதரவேண்டாம். அதுமட்டுமன்றி, உருளைக் கிழக்கு விதைகள் கண்காணிப்பு பிரிவின் அனுமதியுடன்பற்றீரியாதொற்றுடன் வெளியில் விநியோகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது என்பதை நான் ஏற்றுக்கொள்ள மட்டேன்.

இதற்குப் பின்னால் பல்வேறு குழப்பங்கள் உள்ளன. திரிவுபடுத்தப்பட்ட தகவல்கள் உள்ளன. அவற்றின் அடிப்படையில்தான் இங்கு பேசப்படுகின்றது. ஆகவே இந்த விடயம் சம்பந்தமாக மேலதிக விசாரணைகள் தேவையாகின்றன என்றார்.

## தட்டம்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும்கல்முனையிலும் இந்த தடுப்பூசி ஏற்றும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் ஜனவரி 06 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது என்றார்.

இதேவேளை, 2019 ஆம் ஆண்டில் தட்டம்மை நோயை ஒழித்தநாடாக இலங்கையை உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்தது. எனினும் தற்போது அந்த நோய் மீண்டும்பரவத்தொடங்கியிருக்கிறது.



காலைக்கதிர் Kalaikkathir

# கொவிட் உப வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெற வழிகாட்டல்களை மக்களுக்கு வழங்கவேண்டும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொவிட் 19 வைரஸின் ஜே.என் 1 உப வகை தொடர்பில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை விரைவாகப் பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அலுத்கே தெரிவித்தார்.

நாட்டுக்குள் நுழைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படும் கொவிட் வைரஸின் புதிய வகை தொடர்பாக சுகாதார துறை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

கொவிட் வைரஸ் தொற்றின் புதிய வகை தொற்றான ஜே.என் 1 நாட்டுக்குள் நுழைந்திருப்பதாக நம்புகிறோம். அதனால் விமான நிலையத்தில் இது தொடர்பாக அறிவுறுத்தும் நடவடிக்கை மற்றும் பரிசோதனை நடவடிக்கையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் இந்த வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெற பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை விரைவாக பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளிட்ட எச்சரிக்கைக்குரிய குழுவினர் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் இதற்கு முன்னர் செயற்படுத்திய கொவிட் சுகாதார வழிகாட்டல்களை மீண்டும் செயல்வலுப்படுத்துவதற்காக விரைவாக செயற்படுத்துவது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும்.

அத்துடன் இந்த புதிய கொவிட் பிறழ்வு உப வகை தொடர்பாக அவதானமாக செயற்பட வேண்டிய ஒன்று என உலக சுகாதார அமைப்பு கருத்துத் தெரிவித்திருக்கிறது. கொவிட் உலக தொற்று நிலைமையில் இருந்து மீண்டாலும் இவ்வாறான அலகு வகைகள் எந்த சந்தர்ப்பத்திலும் வெளிப்படக்கூடும். அதனால் இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி. இது தொடர்பாக இருந்துவரும் எச்சரிக்கை தொடர்பாக அறிவிப்பு செய்வது முக்கியமாகும்.

குறிப்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய குழுவினருக்காவது முகக்வசம் அணிவது, கைகளை கழுவுவது போன்ற சுகாதார செயற்படுகளை மேற்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு விரைவாக அறிவுறுத்த வேண்டும். - என்றார். (05)

### அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை நடத்தி வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர்.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசிய போது தெரிவித்ததாவது:

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அழைப்புக்கு ஏற்பவே நான் வருகை தந்தேன். என்னிடத்தில் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. தேட முடியாத விடயங்களை தேடி, உண்மையை அடையாளம் காண்பவர்களையே நாம் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் என்று கூறுகின்றோம். அந்த வகையில் என்னிடத்தில் உள்ள தகவல்கள் குற்றப்புலனாய்வு அதிகாரிகளிடத்தில் இல்லையென்றால் அது விநோதமான விடயமாகும்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, முன்னாள் அமைச்சின் செயலாளர், மற்றும் பணிப்பாளர் ஆகியோர்தான் பிரதான சூத்திரதாரிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். இது சிறுவர்களுக்கும் நன்கு தெரியும். ஆகவே இதுவொரு ரொக்கெட் விஞ்ஞானம் அல்ல.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் எனக்கு தேநீர் வழங்கினார்கள். உபர் மூலமாக பகலுணவு வழங்கினார்கள். ஆனால் அந்த அதிகாரிகள் மிகக்குறைந்த வருமானத்துடன் தான் இயங்குகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் செயற்படும் அந்த அதிகாரிகளால் எவ்வாறு திருடர்களையும், மோசடிக்காரர்களையும் கைது செய்ய முடியும் என்பதே எனக்குள்ள கேள்வியாகும் - என்றார்.

### லஞ்ச ஊழல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டுள்ளனர்.

2024 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் அரச சேவையின் அனைத்து மட்டங்களிலும் ஊழலை தடுப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது.

அரச சேவையின் தார்மீக விழுமியங்கள் மற்றும் நல்இருப்பைப் பாதுகாத்து, அனைத்து வகையான ஊழல்களையும் தடுப்பதற்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தமது நீண்டகால அனுபவத்தைப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊழலுக்கு எதிராக போராடும் இலங்கையின் பொறுப்புக்கூறலை, உறுதிசெய்யும் முன்னணி நிறுவனமாக, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு செயற்படுகிறது.

### 15 மருந்துக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கல்களினால் இவற்றை விடுவிக்க முடியாதுள்ளது. இந்தச் சிக்கல் நிலை தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் அறிக்கையின் பின்னரேயே மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

### அசாதாரண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசெம்பர் மாதத்தில் மட்டும் டெங்கு தொற்றால் நால்வர் உயிரிழந்துள்ளனர். இதேநேரம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் நான்கு பிரதேச வைத்துயசாலையிலும் டெங்கு சிகிச்சையை முன்னெடுப்பதற்கான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. விசேட விழிப்பூட்டல், நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது யாழ் போதனா வைத்தியசாலையில் இருவிடுதிகள் இதற்கெனத் தனியாக ஒதுக்கப்பட்டள்ளன. அதனை கண்காணிப்பதற்காக 60 வைத்திய மற்றும் பராமரிப்பு ஊழியர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை டெங்கு உதவியாளர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய பணியாளர்களாக பயிற்சிபெற்ற 53 பேரையும் நிரந்தரமாக்க வேண்டும். அதன் மூலம் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும் எனவும் பிராந்திய பணிப்பாளர் கேதீஸ்வரன் சுட்டிக் காட்டினார்.

### பொதுமக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி எழுப்பப்பட்டது. இந்தச் சுற்றிவளைப்புக்களால் பொதுமக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால், இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம். அதேபோன்று நீதிமன்றத்தினையும் நாடமுடியும். ஆனால், போதைப்பொருள் ஒழிப்பு விடயத்தில் பொலிஸார் கிடைக்கின்ற துப்புக்களுக்கு அமைவாகவே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருளால் நாடும், சமூகமும் சீர்கெடுவதை தடுக்க வேண்டுமாயின் நிச்சயமாக இந்தச் செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றார்.

### கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வை சிறப்பிக்க அனைத்து அரசியல் கட்சிகள், மலையகத்தை பிரதிநிதுவப்படுத்தும் அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தக சமூகத்தினர் என அனைவரும் வருகைதரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்வில் இந்திய தனியார் தொலைக்காட்சியான சீ தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப நிகழ்வின் பாடல் போட்டியில் வெற்றிப்பெற்ற கில்மிசா மற்றும் அப்போட்டியில் கலந்துகொண்டு சிறப்பாகப்பாடிய அசானி ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்சக்களைப்போல ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக்கூற வேண்டும்

## சரித ஹேரத் காட்டம்



பொருளாதாரப் பாதிப்புக்கு ராஜபக்சர்களைப் போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக்கூற வேண்டும். 2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு ஆதரவு வழங்குவதா? அல்லது பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை முன்வைக்கும் தரப்பினருக்கு ஆதரவு வழங்குவதா என்பதை நாட்டுமக்கள் தீர்மானிக்க வேண்டும் என சுதந்திர மக்கள் சபையின் பொதுச்செயலாளர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

2024 ஆம் ஆண்டு அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பில் பாரிய மாற்றம் ஏற்படும். பொருளாதார பாதிப்புக்கும் தனக்கும் எவ்வித தொடர்புமில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு செயற்படுகிறார். பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்சர்களை போல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் வரையறையற்ற வகையில் சர்வதேச பிணைமுறியங்களில் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களால் இலங்கையில் அரசமுறை கடன்கள் நெருக்கடிக்குள்ளானது.

நல்லாட்சி அரசாங்கத்தில் நாடு வங்குரோத்து நிலையடைந்திருக்க வேண்டும். வங்குரோத்து நிலையை ரணில் விக்கிரமசிங்க பிற்போட்டார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியில் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. முறையான முகாமைத்துவமில்லாததால் வங்குரோத்து நிலைக்கு செல்ல நேரிட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதைய பொருளாதாரப் பாதிப்பின் ஒரு பங்குதாரர். அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு ஆதரவு வழங்குவதா ? அல்லது பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கான திட்டங்களை முன்வைப்பவர்களுக்கு ஆதரவு வழங்குவதா ? என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். - என்றார். (05)

# தேசபந்து தென்னகோன் குறித்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு: அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்;றி உபகுழு ஆராய்கிறது

## சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தகவல்



பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுடன் தொடர்புடைய வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு முன்னெடுக்கக்கூடிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து தமது உபகுழு ஆராய்ந்து வருவதாகவும், அதனைத்தொடர்ந்து உரிய பரிந்துரைகள் முன்வைக்கப்படும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கௌஷல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நபரொருவரை சட்டவிரோதமாகக் கைதுசெய்து, தடுத்துவைத்து, சித்திரவதைக்கு உட்படுத்திய குற்றத்துக்காக தற்போதைய பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளடங்கலாக 4 பொலிஸ் அதிகாரிகள் மேற்கூறப்பட்ட சித்திரவதையால் பாதிக்கப்பட்ட நபருக்கு தலா 5 லட்சம் ரூபாவை நட்டஈடாக செலுத்தவேண்டுமென கடந்த இருவாரங்களுக்கு முன்னர் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதனையடுத்து நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள சில வழக்குகளுடன் தொடர்பு பட்டிருக்கும் தேசபந்து தென்னகோன் ஜனாதிபதியால் பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்திய சட்டத்தரணிகள் கூட்டிணைவு, அதற்கு அரசமைப்புப்பேரவை எவ்வாறு அனுமதியளித்தது எனவும் கேள்வி எழுப்பியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கௌஷல்ய நவரத்ன, இவ்விடயம் குறித்து தமது உபகுழு ஆராய்ந்துவருவதாகத் தெரிவித்தார். அந்த உபகுழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னரேயே அடுத்தகட்டமாக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகளை வெளியிடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை தேசபந்து தென்னகோன் சித்திரவதை தொடர்பான வழக்கில் நாட்டின் அதியுயர் கட்டமைப்பான உயர்நீதிமன்றத்தால் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்டிருக்கிறார் எனவும், எனவே அவர் அரச சேவையில் உயர்பதவியை வகிக்கமுடியுமா என்பது கேள்விக்குரிய விடயமே எனவும் கௌஷல்ய நவரத்ன ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# ரயிலில் மோதியதில் காட்டு யானை சாவு

அநுராதபுரம் கனேவெல்பொல பிரதேசத்தில் ரயிலால் மோதப்பட்டு காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்த சம்பவம் நேற்று (வியா ழக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த யானை 25 வயதுடைய ஆண் யானை என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதியே இந்த யானை உயிரிழந்துள்ளது. (05)

# அரசியல் தெளிவு......

அனைவருக்கும்விரிவாகஎடுத்துரைக்கவேண்டும்.

ஏன், ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பேசும் மக்களில் பொது வேட்பாளர், நாடாளுமன்ற தேர்தலில் அவரவர்களுக்கு விரும்பிய கூட்டணி, என்பதைக்கூடப் பரிசீலித்துப் பார்க் கலாம். காரணம், ஒரு பொது தமிழ் வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவார் என்று எதிர்பார்க்க முடியாது. அது தென்னிலங்கை தலைமைத் துவ கட்சிகளுக்கு ஒரு ஆறுதல், உத்தரவாதம்.

அதே சமயம், நாடாளுமன்றத் தேர்தலில் அரசு அமைப்பதற்குத்தென்னிலங்கைஅரசியல்தலைமைகள், பிற இன நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அதைவிட முக்கியமாகஅவர்கள்சார்ந்தகட்சிகளையும் வலைவீசி தேடுவார்கள். அந்த வாய்ப்பை தங்களது மக்களின் அன்றாடத் தேர்வைகளைப் பூர்த்தி செய்து கொள்ளப் புத்திசாலிதனமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

### விருப்பு வாக்குகள்

தொடரும் அரசியல் சூழ்நிலையில், ஜனாதிபதி தேர்தலில், முதல் சுற்றில் எந்த வேட்பாளரும் வெற்றிபெற்று விடுவார் என்று கருதுவதற்கு இடமில்லை. மாறாக, இந்தத் தேர்தலில், இரண்டாவது விருப்பு வாக்குகள் அடிப்படையிலேயே வெற்றி-தோல்வி முடிவு செய்யப்படும் என்ற பரவலான கருத்து நிலவுகிறது.

தற்போதைய நிலவரப்படி, ஜேவிபி தலைவர் அனுர குமார திசநாயக, மக்கள் சக்தி நிறுவனர் சஜித் பிரேமதாசா ஆகியோர் களத்தில் முன்னிலையில் உள்ளனர். அவ்வாறு கருத இடமிருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே, தேர்தலில் போட்டியிடும் விடயத்தில், இன்னமும் உள்ளே-வெளியே ஆட்டம் ஆடிக்கொண்டிருக்கிறார்.

முக்கிய 'ஆளும் கட்சியான' மொட்டுக் கட்சி ரணிலை ஆதரிக்கப் போகிறதா, அல்லது தொழிலதிபர் துமிந்த பெரேரா போன்ற ஒருவரைக் களமிறக்கப் போகிறதா, என்பதில் ராஜபக்சக்களே குழப்பத்தில் இருப்பதாகத் தெரிகிறது. தேர்தலில் படுதோல்வி என்பது புரிந்திருக்கும் வேளையில், கட்சியே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு அவமானப்பட வேண்டுமா என்பது அவர்கள் முன்னாலிருக்கும் முக்கிய கேள்வி.

அதிலும் குறிப்பாக, நாமல் ராஜபக்ச போன்ற இளம் குடும்ப உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தலில் நின்று, படுதோல்வி அடைந்தால், அதுவே அவரது அரசியல் எதிர்காலத்திற்கு ஆப்பு அடித்துவிடும் என்பதை அவரது தந்தையான மஹிந்த நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார். அதற்கும் அப்பால், நாமல் இன்னமும் அரசியல் முதிர்ச்சி அடையவேண்டி இருக்கிறது என்பதும் அப்போது மட்டுமே அவரால் எதிர்வரும் காலங்களை சமாளிக்க முடியும் என்பதும் அவரது கருத்து.

### பாதி தமிழ் வாக்கு

கடந்த ஜனாதிபதி தேர்தலில், தோல்வி அடைந்த சஜித் பெற்ற நாற்பத்திரண்டு சதவீத வாக்குகளில் பாதி, தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தவர்களது என்று கருத இடமிருக்கிறது. தற்போதைய சூழலில், ரணிலோ அல்லது மொட்டு கட்சி வேட்பாளரோ முதல் இரண்டு இடங்களில் வருவது அரிதான விடயம்.

முதல் விருப்பு வாக்கு அடிப்படையில் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், இரண்டாவது விருப்பு வாக்கு சார்ந்த போட்டி, அனுர மற்றும் சஜித் இடையேயே இருக்கும் என்று கருதப்படுகிறது. அவ்வாறானால், மூன்று தமிழ் பேசும் இனத்தவர்களுமே, முதல் சுற்று வாக்குகளை தங்களது பொது வேட்பாளருக்கு அளித்து விட்டு, இரண்டாவது சுற்று வாக்குகளை வேறு ஒரு பொது வேட்பாளருக்கு அளிப்பதாக தங்களுக்குள் ஒரு டீல் போட்டுக் கொள்ளலாம்.

அல்லது, இரண்டாவது விருப்பு வாக்குகளை கட்சிகளும் சமூகங்களும் தங்களது விருப்பம் போல் அளித்துக் கொள்ளலாம் என்றுகூடப் பொதுவான ஒரு முடிவை எடுக்கலாம். அல்லது, இது போன்ற வேறு உத்திகளை யோசித்து ஒன்றாக நினைத்துச் செயல்படுத்தலாம்.

இவ்வாறெல்லாம் செய்தால், அல்லது செய்தால் மட்டுமே சிறுபான்மையினர் அனைவருமாக ஒரு அதிரடிச்செய்தியை தென்னிலங்கைக்கு அளிக்கலாம். நாட்டின் அரசியலுக்கு ஏற்ப சிறுபான்மையினர் முடிவுகளும் மாறும் என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு தெளிவு படுத்தினால் (மட்டுமே), அவர்களுக்கும் தெளிவு பிறக்கும் வாய்ப்பாவது உள்ளது.

# எல்பிட்டியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழப்பு

எல்பிட்டி பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளதாக எல்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் எல்பிட்டி, கணேகொட பிரதேசத்தைச் சேர்ந்த தொடங்கொட ஹேவகே சுசந்த குணசேகர என்ற 43 வயதுடையவராவார்.

இவரது மனைவி வெளிநாட்டில் வேலை செய்து வரும் நிலையில் இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் எல்பிட்டி - மைத்திரிகம பிரதேசத்தில் விற்பனை நிலையம் ஒன்றிற்கு அருகில் இனந்தெரியாத நபரொருவரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து இவர் பிரதேச வாசிகளால் 1990 இலக்கத்திற்கு அழைக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளார்.

இந்தசம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளைஎல்பிட்டிபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மின்சாரம் தாக்கியதில் காட்டு யானை இறப்பு

அநுராதபுரம் - மதவாச்சி பிரதேசத்தில் காட்டு யானை ஒன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது.

உயிரிழந்த காட்டு யானை 25 வயதுடையது என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. மதவாச்சியில் உள்ள வயல் ஒன்றிலிருந்து இந்தக் காட்டு யானையின்சடலம்மீட்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக வயலில் பொருத்தப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்கியே இந்த காட்டு யானை உயிரிழந்துள்ளது. இந்த மரணம் தொடர்பில் சந்தேகிக்கும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வயலின் உரிமையாளரைக் கைது செய்துள்ளனர்.

இந்தச்சம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளைவனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மேல் மாகாணப் புலனாய்வுப் பிரிவு சார்ஜன்ட் ஹெரோயினுடன் கைது

மேல் மாகாண புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் 2 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயினுடன் கிரிதிவெல பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் கிரிதிவெல பிரதேசத்தை சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)







# வையகம் வாழ்க வாழிய சைவ நெறி

தொன்று தொட்டு சிவ பூமியாக விளங்கும் எமது ஈழத்திருநாட்டிலே வாழும் சைவர்களாகிய நாம் பல்வேறுபட்ட சைவ மரபுகளை எம்மகத்தே கொண்டுள்ளோம். அந்தவகையில் சைவ வழிபாட்டு மறைகளானவை இறைவனை வழிபடும் முறைகளாகும் அந்தவையில் அவை இருவகைக் கொள்ளப்படுகின்றன. ஆகம வழிபாடு மற்றயது ஆகமம் சாராத வழிபாடாகும். அந்த வகையில் ஆகம வழிபாட்டில் இறைவனை வழிபடுவதற்கான நியதிக் காணப்படுகின்றன. உதாரணமாக ஆலய அமைப்பு பூஜைவழிபாட்டு முறைகள் போன்றன இதற்குள் அடங்கும் ஆனால் ஆகமம் சாராத வழிபாடு அவ்வாற ஒன்றையும் கொண்டிருப்பதில்லை. தூய மனதோடு இறைவனை எவ்வழியில் நின்று வழிபடலாம். இதனையே எமது முன்னோர்கள் சமயக்கரவர்கள் பலர் கடைப்பிடித்துதமதுவாழ்வில்ஈடேறினர்சைவ வழிபாட்டு மரபுகள் எம்மை இறைவனோடு இரண்டறக் கலந்து மெய்நிலையை அடைய உதவுகின்றன. சூர சங்கம வழிபாடு இலிங்க வழிபாடு குருவழி பாடு போன்ற பல்வேறு மரபுகள் காணப்படுகின்றன. அவற்றைக் கடைப்பிடித்து ஒவ்வொருவரும் சைவ வாழ்வு வாழ வேண்டும்.

இந்தச்சரீரம் எமக்கு கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். என்ற சைவப்பெரியாரின் கருத்திற்கமைய எம் முன்னோர்கள் தமது வாழ்வில் சைவ விழுமிய ஒழுக்கங்களை பேணி வாழ்வாங்கு வாழ வழி வகுத்தவை இவையாகும். எமது முன்னோர்கள் வேதங்கள் கூறுகின்ற ஆகம வழிபாட்டிற்கமைய வழிபட முன்னர் மிக எளிமையான முறையிலேயே இறைவனை வழிப்படனர். அதற்குள் ஒன்றாக நாட்டார் வழிபாட்டு முறையும் உள்ளடங்கும். மக்கள் தமது குல தெய்வங்கள் எனக் கருதிய சிறு தெய்வங்களை தமது அயற்சூழலிலே சிறு மடாலயங்கள் அமைத்து வழிபட்ட வரலாறு இன்றும் எமது நாட்டில் பல்வேறு பாகங்களில் காணப்படுகின்றன. மடைபரவுதல் தீக்



குளிப்பு குளிர்த்தி பொங்கல் போன்ற பல்வேறு முறைகளுடாக மிகவும் பக்தி பூர்வமாக இறைவனை வணங்கி தமது வேலைகளில் ஈடுபட்டனர் . பின்னர் சங்க காலம் சங்கமருவிய காலங்களில் சைவம் தழைத்தோங்கக் காரணமாக எம்முன்னோர்கள் பலர் சிறு ஆலயங்களை அமைத்த வழிபாட்டு முறைகளை மேற்கொண்டனர். காலம் மருவி ராஜராஜசோழன் போன்ற மன்னர்கள் எமது சைவம் நாடெங்கும் பரவும் வகை பேராலயங்கள் பலவற்றை அமைத்து வழிபட்டனர்.

எவ்வாறிருப்பினும் கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் நீறில்லா நெற்றி பாழ் என்ற ஔவையாரின் கருத்துக்களுடாகவும் எமது சைவ சமய மேன்மை துலங்ககின்றது. வேற்று மதங்களில் இல்லாத சிறப்புக்களையும் ஒழுக்கவியல்களையும் கொண்ட ஒரேயொரு சமயம் சைவ சமயமாகும். இதனாலேயே பல்லாயிரக் கணக்கான வரலாற்றை எமது இந்து சமயம் கொண்டுள்ளது. அதனது மகத்துவத்தினையும் மேன்மையையும் விளங்கிய பண்டைக்கால மக்கள் ஏட்டு வடிவில் வழிபாட்டு முறைகளை தமது எதிர்கால சந்ததியினரும் பின்பற்றவேண்டும் என்று எண்ணி எழுதி வைத்தனர். அவ்வாறு பாதுகாக்கப்பட்ட உயரிய சைவ சமயத்தை பின்பற்றுவோரும் சிறப்புடையோர்

மனம்,வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் இறைவனை மெய் அன்போடு வழிபடுதல் என்ற ஐந்தாம் குரவராகிய ஆறுமுக நாவலரின் கருத்திற்கமைய நித்தமும் சொல்லாட் சேட்சியன் ஆகிய இறைவனை நாம் தூய உடலினால் வழிபட்டால் நாம் வேண்டிதை நாம் கேட்பதற்கு முன்னரே வழங்கும் தாயுமான இறைவனை நாம் வழிபட்டு முத்தியின்பம் பெற வேண்டும் கண்ணப்ப நாயனார் மாமிசத்தை இறைவனுக்குப்படைத்து மனமுருகி வழிபட்ட போது அவரது பக்தி வல்லமையை மெச்சி இறைவன் அதையும் ஏற்றுக்கொண்டார் அல்லவா? ஆம் இதிலிருந்து இறைவனை வணங்க நெறிகள் தேவையில்லை நல்லுள்ளம் இருந்தால் போதும் என்பதே உண்மையாகும். குருவருள் இன்றி ஏது திருவருள்

எத்தனையோர் சமயக்குரவர்கள் அறிஞர்களை தமது ஆசிரியர்களை வழிபட்டு மெய்ஞானம் பெற்றனர். 'குருவருள் இன்றி ஏது திருவருள்' என்ற ஞானாசிரியராக இறைவனைக்கொண்டு குருவழிபாட்டால் எமது மாணிக்கவாசகர் ஈடேறினார். இவ்வாறாக இலிங்க வழிபாட்டால் நந்தி தேவன் போன்றோரும் மெய்நிலை எய்தினர். இவையனைத்தும் சைவ சமயப்பாரம்பரியங்கள் ஆகும் மாதா பிதா குரு தெய்வம் என இறைவன் எம்மை நம் பெற்றோர்கள் குருவடிவில் நின்று வழிப்படுத்துகின்றனர். இறுதியில் தெய்வ நிலை வழங்குகின்றான். இவ்வாறாக ஆரம்ப கால சைவ சமய மரபுகள் காணப்பட்டாலும். தற்காலத்தில் ஆகமம் சார்ந்த முறைப்படியே பரவலாகக் கைக்கொள்ளப்படுகினறன.

ஆலய அமைப்பு முதல் வழிபாட்டு முறைகள் அனைத்துமே ஆகமம் சார்ந்தே விளங்குகின்றன. மிகவும் பக்தி பூர்வமாகவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இவை மக்களை நல்வழிப்படுத்தி வாழ்வாங்க வாழ வழிவகுக்கின்றன. வாழ்வியல் ஒழுக்கங்களை எமக்குப் போதிக்கின்றன. அவற்றினூடு மக்களை பிறரெகிழ்வான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத்தடுத்து அமைதியானவாழ்வை வழங்குகின்றது. எமது சமூகத்தில் நாம் மதிக்கப்படத்தக்க ஞானிகளாக மிளிர சைவ சமயம் வழிகோலுகின்றது. இதனாலே ஆலயங்கள் அனைத்து இடத்திலும் அமைத்து திருவிழாக்களை மேற்கொண்டு அவற்றின்பால் கவனம் செலுத்தி வேற்று வழிகளை நாடா வண்ணம் நம்மைப் பேணுகின்றது. நலலூர்க்கந்தன் ஆலயம் ஆகமம் சாராத நிலையில் அமைக்கப்பட்டாலும் எம்மக்கள் அனைவரையும் நல்லூர் கந்தன் தடுத்தாட்கொண்டு அருள் புரிகின்றான் அல்லவா அதனாலேயே திருவழாக்கள் முன்னெடுக்கப்பட்டு அனைவருக்கும் இறையருள் கிடைக்க அருள்செய்யப்படுகின்றது. ஆலத்திற்கு செல்வோர் அனைவருக்கும் நல்வாழ்வு கிட்டும் இதனையே நம் முன்னோர்கள் அறிந்த சைவ தழைத்தோங்க வழி கோலினர். இதனைப் பேணிப்பாதுகாத்து சைவம் மென்மேலும் தழைத்தோங்க செய்ய வேண்டிது சைவர்களாகிய எம் அனைவரினதும் வாழ்வியற் கடமையாகும். ஆகவே மாணவர்களாகிய நாமும் அதனைக் கருத்தில் கொண்டு சைவ மரபுகளைப் பின்பற்றி பாடசாலை ரீதியில் மட்டுமன்றி உலகறி சைவத்தின் நன்னெறிகளைப் பரப்புவதற்கு உதவ வேண்டும். மேன்மையான தூய மனத்தோடு இறைவனை வணங்கி வாழ்வில் சிறப்பறுவோமாக சைவ மரபுகளைப் பின்பற்றுவோம் நல்வாழ்வு பெறுவோம். மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

டு.சஜிந்தன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# சக்தி வழிபாடு



ஆற்றங்கள் அனைத்தும் அருளும் அன்னை பராசக்தி எங்கும் எதிலும் நிறைந்திருந்து சர்வ வல்லமை பொருந்தியவளாகவும் அனைத்தும் அறிந்தவளாகவும் விளங்குகின்றாள். அன்னையானவள் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தியாக விளங்கி பர்மனின் பத்தினியாகவும் விளங்குகின்றாள். என்றும் வீரத்தை அள்ளியே தந்திடும் அலைமகளாகவும் செல்வத்தை செழிப்புடனே தந்திடும் மலைமகளாகவும் கல்வியை கனிவுடனே தந்திடும் கலைமகளாகவும் அவதாரம் எடுக்கின்றாள்.

சிவனின்றி சக்தி இல்லை சக்தியின்றி எதுவும் இல்லை என்பதற்கமைய சக்தியானவள் முதன்மைப்படுத்தப்படுகின்றாள். இறைவன் உலகத்தை படைக்கின்றான். மனிதனைப் படைக்கின்றான். மனிதன் வாழ்வதற்குதேவையானஒவ்வொன்றையும் கச்சிதமாகப் படைக்கின்றான் ஆனால் இவற்றையெல்லாம்இயக்கும்சர்வவல்லமை சக்திக்கே உரியது என்று கருதி சக்தியின் கைகளில் கொடுத்து விடுகின்றான்.

சக்தியானவள் தாயாக வந்து எம்மைப் பெற்றெடுக்கின்றாள், வளர்க்கின்றாள், மகிழ்ச்சியைக் கொடுக்கின்றாள், தாரமாக வந்து துணை நிற்கின்றாள். சக்தி இல்லாத இடமே இல்லை. வையகம் முழுவதும் நிறைந்து இருக்கின்றாள். தந்தையை அணுக சிறிது தயக்கம் தாயை அணுக தயக்கமின்றி எதுவுமே இல்லை. தப்பு செய்தால் கூடத் தாயை அணுகலாம். சிறு கணப்பொழுதில் மன்னித்து விடுவாள்.

அன்னை பராசக்தி எமது குற்றங்களை இலகுவில் மன்னித்து வழிப்படுத்துகின்றாள். உலகில் உள்ள பொருட்கள் யாவற்றையும் வியாபித்து அவற்றை இயக்குபவள் அன்னையே. அவளே ஞானம், பசி, கோபம், தாகம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகளை விதைக்கின்றாள். காணும் இடமெல்லாம் சக்தி பீடங்கள். சக்தி இல்லாத இடமே இல்லை. நாம் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் சக்தி வேண்டும். பராசக்தியை போற்றாத காவியங்களோ



புராணங்களோ எதுவும் இல்லை. பாடாத புலவர்களே இல்லை.

'எங்கெங்கு காணிலும் சக்தியடா தம்பி ஏழ்கடல் அவள் வண்ணமடா' என பாரதிதாசன் சக்தியின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றார். சக்தி வழிபாடு உலக வழிபாடுகளில் முதன்மை வழிபாடாக கருதப்படுகின்றது. பிரம்மா, விஸ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன், ஆகிய ஐந்து பேரையும் அம்சமாக உருவாக்கியவள் அன்னை.

கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றையும் தருபவள் அன்னையே. 'அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்' என்பது மகாகவிபாரதியாரின்வாக்கு. 'முக்கண்ணியை தொழுவோர்க்கு எவ்வித தீங்கும் இல்லையே' என்கிறார் அபிராமிப்பட்டர். நாம் அம்பிகையிடம் முழுமையாக சரணடைய வேண்டும். நமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அவளது காலடியில் போட வேண்டும். ஆடி மாதம் அம்மனுக்கு கூழ் காய்ச்சி வழிபட வேண்டும் இதனால் அன்னை மிகவும் மகிழ்ச்சி அடைவாள். அன்னையழன் மகிழ்ச்சியானது நம்மை வாழ வைக்கும்.

சிவனிடம் இருந்து சக்தியை ஒரு போதும் பிரிக்க முடியாது. உலகமே சிவசக்தி மயமாக உள்ளது. எனவே ஆலயங்களிலும், வீடுகளிலும் அம்பிகையை பராசக்தியாக போற்றி வழிபட வேண்டும். கல்வி, செல்வம், அருள் வேண்டி சக்திக்காக நோட்கப்படும் விரதங்களுள் நவராத்திரி நம்மவர்களால் பயபக்தியுடன் கொண்டாடப்படுகின்றது. இது மட்டுமல்ல கேதாரகௌரி விரதம் நவராத்திரி விரதமும் ஆகும். மக்கள் காவடி, கரகம், குளிர்த்தி போன்றவற்றால் தமது வழிபாட்டை நிறைவு செய்வார்கள் எனவே காணும் பொருளை எல்லாம் சக்தி வடிவமாக பார்த்து படைக்கப்பட்ட உயிர்களில் எல்லாம் அவளுடைய திருவருளை உணர்ந்து நீங்காமல் நிறைந்துள்ள அந்தப் பேரொளியை இணையில்லா அந்த பராசக்தியை போற்றி வணங்குவோமாக.

ம.பபினகா
10 பு, வேம்படி மகளிர் கல்லூரி


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல்களை முற்றுமுழுதாக பகிஷ்கரிப்பதே ஒரே தெரிவு

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திட்டவட்டம்



தமிழர்களின் அரசியல் உரிமையை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு விலைபோயுள்ள தமிழ்த் தரப்புகள்தான் இன்றைக்கு ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று கோரிவருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல், அதனைப் பகிஷ்கரிப்பதொன்றே தமிழ்மக்களுக்கு இருக்கின்ற தெரிவு எனவும், அதனையே தாம் தொடர்ந்து வலியுறுத்திவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற கதை தமிழ் அரசியல் களத்தில் ஒரு சிலரால் பரப்பப்படுகின்றது.

அந்த விடயம் தொடர்பாக ஒரு சில தரப்புகள் பெயர்களை கூட முன்மொழிந்திருக்கின்றார்கள். குறிப்பாக சி.வி.விக்னேஸ்வரன் தானாகவே முன்வந்து, அனைத்துக் கட்சிகளும் இணங்கி தனது பெயரை முன்மொழிந்தால் அதனைப் பரிசீலிப்பதற்குத் தயார் என்று கூறியிருக்கின்றார்.

அதேபோன்று இவ்விடயம் தொடர்பில் ஈழுமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் ஒரு கருத்தையும், மனோகணேசனை பொதுவேட்பாளராக நிறுத்தவேண்டுமென பிறிதொரு தரப்பினரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் ஊடகங்கள் இதுபற்றிய எமது நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாகக் கோரிவரும் நிலையில், அதனை இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெல்லக்கூடியது ஏதேனுமொரு சிங்களத்தரப்பே என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்காது என்று நினைக்கிறேன்.

இருப்பினும் அது யாராக இருப்பினும், கடந்த காலங்களில் தமிழர்களுடன் தொடர்புபட்ட அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல், பாதுகாப்பு, காணி அபகரிப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டப் பிரயோகம், அரசியல்கைதிகள் விடுதலை, வடக்கு -கிழக்கில் பௌத்த சிங்களமயமாக்கம் போன்ற பல்வேறு விடயங்களில் தமிழ்மக்களுக்குச் சார்பாக செயற்பட்டதில்லை.

அதேவேளை அரசியல் தீர்வு விவகாரத்தில் அனைவரும் ஒற்றை ஆட்சியையும், அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தையும் வலியுறுத்துகின்ற நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் இனியும் சிங்களத்தரப்புக்கு வாக்களித்து ஏமாறுவதற்குத் தயாராக இல்லை என்ற செய்தியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக உலகுக்குக் காட்டவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் தமிழ்மக் கள் இருக்கின்றனர்.

இந்நிலையிலேயே தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. இதன் உண்மையான நோக்கம் என்னவென்பதை நாம் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

தமிழ் வேட்பாளரொருவரை நிறுத்தினால், சிங்கள வேட்பாளர் தேர்தலில்வெல்வதற்கானவாய்ப்பு இல்லாமல்போகும். அதன்படி இரண்டாம் விருப்பு வாக்கின் ஊடாக வெற்றி வாய்ப்பு தீர்மானிக்கப்படும். அவ்வேளையில் சிங்களத்தரப்பினர் பேரம்பேசுவதற்கு முன்வருவர்.

அப்போது பேரம்பேசி ஒரு தரப்பை ஆதரிப்பதற்கான தீர்மானத்தை எடுக்கலாம். எனவே 'ஆதரிப்பது' தான் அவர்களுடைய நோக்கம். பேரம்பேசுவதாகக்கூறி இறுதியில் சிங்கள வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்பதை சகலரும் நன்கு விளங்கிக்கொள்ளவேண்டும்.

அடுத்ததாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் அரசுக்கான 13 ஆவது திருத்தத்தை வலியுறுத்தி பேச்சியில் ஈடுபடுகின்ற தரப்பினர், தமிழ் வேட்பாளரைக் களமிறங்குவதன் ஊடாகக் கிடைக்கப்பெறக்கூடிய பேரம்பேசும் ஆற்றலை உண்மையிலேயே தமிழர்களின் நலனுக்காகப் பயன்படுத்துவார்களா? தமிழர்களின் அரசியல் தீர்வை ஒற்றை ஆட்சிக்குள் முடக்குவதற்கு விலைபோயிருக்கின்றதமிழ்த்தரப்புக்கள்தான் இப்போது தமிழ் வேட்பாளரைக் கள மிறக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றனர்.

இந்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலைப் பகிஷ்கரித்தல் என்ற ஒரேயொரு தீர்வுதான் தமிழ்மக்களுக்கு இருக்கின்றது. இதனை நாம் பல வருடகாலமாகத் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றோம். இருப்பினும் துரதிஷ்டவசமாக தமிழ்மக்கள் அதன் ஆழத்தைப் புரிந்துகொள்ளாமல், ஒவ்வொரு முறையும்போலியானகதைகளை நம்பி வாக்குகளை வழங்கி, ஏமாற்றப்பட்டுவருகின்றார்கள். எனவே இம்முறை தமிழ்மக்கள் நன்கு சிந்தித்துத் தீர் மானம் மேற் கொள்ளவேண்டும். -என்றார்.

(05)

# மலையக தமிழ்மக்களை கௌரவித்து இந்தியா வெளியிடும் முதல் முத்திரை

## செந்தில் தொண்டமானிடம் கையளிக்க ஏற்பாடு




இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், தமது உரிமைகளை வென்றெடுக்கவும்கௌரவமானதொரு வாழ்க்கையை வாழ்வதற்கும், பல்வேறு போராட்டங்களையும் தியாகங்களையும் செய்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில், எமது மலையக மக்களுக்கான அங்கீகாரம் என்பது, இன்றைய சூழ்நிலையில் மாபெரும் தேவையாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின்ஆலோசனையின் பேரிலும் தமிழக பா.ஜ.க. தலைவர் கே.அண்ணாமலையின்ஏற்பாட்டிலும், நம்மலையகமக்களைக்கௌரவிக்கும் வகையில், இந்திய தபால்துறை அமைச்சினூடாக முத்திரையொன்று வெளியிடப்பட்டு, இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

புதுடில்லியில், இம்மாதம் 30 ஆம் திகதியன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வின்போது, பாரதீய ஜனதாக் கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி.நடாவினால், கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸின்தலைவருமான செந்தில் தொண்டமானிடம் முதல் முத்திரை கையளிக்கப்படவுள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கைக்கு இடம்பெயர்ந்தமை தொடர்பான நூற்றுக்கணக்கான ஆவணங்கள், கோப்புகள் பரிசீலிக்கப்பட்டு, உரிய வரலாற்றுச் சுவடுகளோடு இந்த முத்திரையை வெளியிடுவதற்கு, இந்தியத் தபால் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதன்மூலம், இலங்கைக்கு இடம்பெயர்ந்ததமிழர்கள்தொடர்பிலான வரலாறு, இந்தியர்களுக்கு எளிதில் எடுத்துரைக்கப்படுகிறது.

இவ்வாறு வெளியிடப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க முத்திரையை, உலகின்மிகப்பெரிய அஞ்சல் வலையமைப்பைக் கொண்டுள்ள இந்தியாவின் 155,015 இற்கும் மேற்பட்ட தபால் நிலையங்களிலிருந்து, எதிர்வரும் 30ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தியாவிலிருந்துஇடம்பெயர்ந்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், சீனா, ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பூட்டான் உள்ளிட்ட 210 இற்கும் மேற்பட்ட நாடுகளில் 32,285,425 இற்கும் அதிகமான இந்திய வம்சாவளி மக்கள் வசித்து வருகின்றனர். இவ்வாறிருக்கையில், அந்த நாடுகளிலிருக்கும் மக்களுக்கு கிடைக்காத அங்கீகாரமொன்று, இலங்கையில் 200 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு கிடைத்திருப்பது, நம் மக்களுக்கு அளிக்கப்படும் மரியாதையாகவே பார்க்கப்படுகிறது.

உதவி, கடமை, பொறுப்புணர்வு என்ற எண்ணப்பாடுகளுக்கு அப்பால், நம் மக்களை நாம் தான் கௌரவிக்க வேண்டும், அவர்களுக்கு நாம் தான் அங்கீகாரமளிக்க வேண்டுமென்ற தொனியில், இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்காக முத்திரையொன்று வெளியிடப்படுவது, இரு நாடுகளுக்கிடையில் காணப்படும் நட்புறவைப் பறைசாற்றி நிற்பதோடு, மலையக மக்களால் இலங்கைக்கும் கௌரவம் கிடைத்திருக்கிறது.

இவ்வாறானதொரு கௌரவிப்பு நிகழ்வில், கிழக்குமாகாணஆளுநரும் இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானிடம் முதல் முத்திரையைக் கையளிக்கநடவடிக்கைஎடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(05)

# பயங்கரவாத எதிர்ப்புசட்டமூலம் ஜனவரியில் நாடாளுமன்றிற்க

## நீதியமைச்சர் விஜயதாஸ திட்டவட்டம்



உத்தேச பயங்கரவாத எதிர்ப் புச்சட்டமூலம் எதிர்வரும் ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும், அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாட விரும்புபவர்கள் நாடலாம் எனவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் பல வருட காலமாகப் பல்வேறு தரப்பினராலும் தொடர்ச்சியாக அதிருப்தி வெளியிடப்பட்டுவருவதுடன், குறிப்பாக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்கும்போது 'பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும். இல்லாவிடின் அச்சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கவேண்டும்' என ஐரோப்பிய ஒன்றியம் நிபந்தனை விதித்தது.

இருப்பினும்அச்சட்டத்தைத்திருத்தியமைப்பதற்குக் கடந்தகால அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

அச்சட்டத்தில் மேற்கொள்வதற்கென முன்மொழியப்பட்ட திருத்தங்கள் சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறு காணப்படாமை, முன்மொழியப்பட்ட திருத்தங்கள் குறித்து தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடுமையான விமர்சனங்கள் எழுந்தமை போன்றன அதற்குக் காரணமாக அமைந்தன.

அதன்நீட்சியாகபயங்கரவாதத்தடைச்சட்டத்துக்குப் பதிலீடாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் முன்மொழியப்பட்ட உத்தேச பயங்கரவாத எதிர்ப் புச்சட்டமூலம் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இருப்பினும் அச்சட்டமூலத்தைநாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குமுன்பதாகவே அதற்குஎதிராகமனிதஉரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்உள்ளிட்ட பரந்துபட்டதரப்பினரிடமிருந்து எழுந்த விமர்சனங்களை அடுத்து, அதில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கடந்த மே மாதம் 2 ஆம் திகதி அரசாங்கம் சகல தரப்பினரிடமும் கோரியது.

அதன்படி சகல திருத்தங்களும் உள்ளடக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் கடந்த ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் நிகழ்நிலைக்காப்பு சட்டமூலம் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் எப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் வினவியபோது, எதிர்வரும் ஜனவரி மாதம் சமர்ப்பிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாகப் பதிலளித்தார்.

அதுமாத்திரமன்றி ஏற்கனவே அச்சட்டமூலத்தில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனவும், எனவே அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாட விரும்புபவர்கள் நாடலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(05)

# மீண்டும் ஆட்சியை பிடிப்பதே ஒரே நோக்கம்

## மஹிந்த உறுதி

2024ஆம்ஆண்டுஇடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களின் வெற்றிப்பெற்று பொதுஜனபெரமுனதலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிப்போம். எதிர்கட்சித் தலைவர் பதவி வகிப்பதற்கும், எதிரணி பக்கம் செல்வதற்குமான நிலைமை எமக்கு ஏற்படாது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிரிந்திவெல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

போதைப்பொருள் ஒழிப்புக்காக முன்னெடுக்கப்படும் விசேட பொலிஸ் சுற்றிவளைப்புகள் வரவேற்கத்தக்கது. போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தலாகக் காணப்படுகிறது. ஆகவே எவ்வழியிலாவது போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரத்தை இல்லாதொழிக்க வேண்டும்.

2024ஆம்ஆண்டுஇடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் வெற்றிபெற்று பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை மீண்டும் தோற்றுவிப்போம். கட்சியை மறுசீரமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிரணி பக்கம் செல்வதற்கும்,எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகிப்பதற்குமான நிலைமை எமக்கு ஏற்படாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் தரப்பினர் எம்முடன் மீண்டும் ஒன்றிணையலாம். தற்போது விலகியுள்ளவர்கள் அனைவரும் எம்முடன் இணக்கமாக செயற்பட்டவர்கள். ஆகவே அவர்கள் தாராளமாக எம்முடன் ஒன்றிணையலாம்.

எம்மீது சேறு பூசுவதையும், பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதையும் ஒரு தரப்பினர் தமது அரசியல் கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். போலியான குற்றச்சாட்டுக்கள் பெற்றிபெறும் சந்தர்ப்பத்தில்நாடுதோல்வியடைந்தது. 2015 ஆம் ஆண்டு அவ்வாறான தன்மையே தோற்றம் பெற்றது. ஆகவேமக்களில்தெளிவுடன்செயற்பட வேண்டும். -என்றார்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.12.2023இல் வெளியிடப்பெற்றது.